மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: ஒவ்வொரு மாநிலத்திற்குப் பொருந்தும் இந்தப் பட்டங்களை நாம் அங்கீகரிக்க வேண்டுமென்ற அடிப் படையில் அங்க்கரிக்கிறோம். ஆந்திர மாநிலம் நம்மை விட்டுப் பிரிந்த தற்குப் பிறகு அதைப் பற்றி இந்தப் பிரச்னை எழுப்பப்பட்டு பரிசீலித்துக் கொண்டிருக்கும்போது, இடையில் மத்திய அரசு நாடு முழுவதற்கும் ஒரு அங்கீகாரம் வைக்கிற முறை வேண்டுமென்று சொல்லியிருக் கிறார்கள். அப்படி ஏற்பட்டுவிட்டால், இந்த **reciprocal basis** வேண்டா மென்று ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையினைப் பின்பற்றலாமா என்று பரிசீலனை செய்யும்போது, காலதாமதம் ஏற்பட் டிருக்கிறது. அதை ஏற்றுக்கொண்டால், ஆந்திர மாநிலப் பட்டம் ஏற்றுக்கொள்ளப்படும் சூழ்நிலை உண்டாகும்.

Loans to Elementary School Teachers

* 284 *Q.*—THIRU V. ISVARMURTHI: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether the Government propose to extend the facility of interest-free loans to Elementary School teachers?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: அரசாங்கத் தொடக்கப்பள்ளி களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குப் பண்டிகைக் கடன்களும், கொசுவலை கடன்களும் வழங்கப்படுகின்றன. இக்கடன்களுக்கு வட்டியில்லை. வேறெந்த வட்டியில்லாக் கடன்களும் அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. அரசு மானியம் பெறும் தொடக்கப் பள்ளிகளுக்கு ஆசிரியர்களுக்கு இந்த வசதிகள் எதும் கிடைப்பதில்லை. ஆயினும் ஊராட்சி ஒன்றியங்கள் தமது ஆளுகையின் கீழ் உள்ள தொடக்கப்பள்ளிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு, அவற்றின் நிதிநிலை இடந்தருமாயின், அத்தகைய பண்டிகைக் கடன்கள் வழங்கலாம். அதைப்போலவே, தனியார் பள்ளிகளின் நிர்வாகத்தினரும் தாம் விரும்பினால் ஆசிரியர்களுக்கு அத்தகைய கடன்களை வழங்கலாம்.

THIRU K. S. ABDUL WAHAB: May I know the maximum amount that is proposed to be given as loan to the teachers?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன். இப்போது எவ்வளவு கொடுக்கிறார் கள் என்ற விவரம் என்னிடம் இல்லை.

Seats reserved in Teachers' Training Schools for Scheduled Tribe students

* 285 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of seats reserved in the Teachers' Training School in Tamil Nadu during the academic year 1968–69 for the students belonging to Scheduled Tribes; and

(*b*) the number of students belonging to Scheduled Tribes undergoing teacher training during the current academic year?

மாண்புமிகு திரு. ஸ்ஸ். மாதவன்: (அ) இப்போதுள்ள ஆணைகளின் படி, இம்மாநிலத்திலுள்ள எல்லாப் பயிற்சிப்பள்ளிகளிலும் அரிசனங் களுக்கும், பழங்குடி மக்களுக்கும் 16 சதவீத இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும். இதைத் தவிர பழங்குடி மக்களைச் சேர்ந்தவர்களுக்கென தனிப்பட்ட முறையில் இடம் எதுவும் ஒதுக்கிவைக்கப்படுவதில்லை.

(இ) 26.